JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 44/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW1 | Prosecution /Defence / Court | |
| Name | Jayakodi | Caste | |
| Father's Name | W/o.Rasan | Calling | |
| Village | Saralai, Kuttankattuvalasu | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A1-Saraswathi, W/o.Nachimuthu, A2-Nachimuthu, S/o.Karuppanagounder are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 14.03.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு பாரதி பள்ளி பேருந்திற்கு ஆயாவாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது. புட்டன்காட்டு ஊரில் எங்களுக்கு சொந்தமான காடு முக்கால் ஏக்கர் உள்ளது. அந்த காட்டில் சோளம் மற்றும் கடலை விதைத்து பயிர் செய்வோம். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக ஆஜர் எதிரிகளுக்கு சொந்தமான ஐந்தாறு செம்மறி ஆடுகள் எங்களுடைய காட்டில் மேய்ந்து கொண்டிருந்தது. நான் ஆஜர் எதிரிகளுக்கு சொந்தமான ஆட்டை எங்கள் காட்டில் இருந்து துரத்தி விட்டபோது ஆஜர் எதிரிகள் ஏலே கழுதை முண்டை ஆட்டை துரத்துகிறாய் என தகாத கெட்டவார்த்தை பேசி திட்டி என்னை அடித்தார்கள்.

2)குச்சியால் என்னை ஆஜர் எதிரிகளில் பெண் எதிரி என்னை குச்சியால் அடித்து இருவரும் என்னை கீழே தள்ளி விட்டார்கள். அதனால் நான் கீழே விழுந்துவிட்டேன். ஆஜர் எதிரிகளில் பெண் எதிரி என்னை என்னுடைய இடது மார்பில் அவரது பல்லால் கடித்து வைத்துவிட்டார். அவ்வாறு அவர் கடித்து வைத்ததில் எனக்கு புண்ணாகி விட்டது. எனக்கு

மயக்கம் வந்துவிட்டது. முதலில் என்னை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன்பின்னர் மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சேர்த்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள இடது பெருவிரல் கைரேகை நான் வைத்ததுதான். (**புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1)1 ம் எதிரி கருப்பணகவுண்டரின் மகன் என்றால் சரிதான். கிரயம் வகையில் தான செட்டில்மெண்ட் வகையிலும் 1 ம் எதிரிக்கு இரண்டு ஏக்கர் 85 சென்ட் பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் நீண்ட நாட்களாக பூமி பிரச்சணை உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். எனக்கு பாத்தியம் என நான் கூறும் காடானது எத்தனை மாதமாக தரிசாக கிடந்தது என்றால் சுமார் ஆறு மாதமாக தரிசாக கிடந்தது. பெருந்துறை போலிசாரிடம் பூமி சம்பந்தமாக 1 ம் எதிரி புகார் கொடுத்தார் என்றும் அதில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படியும் கூறினார் என்றால் சரிதான்.

2)சம்பவ தினத்தன்று நான் உழவு ஓட்டினேன் என்றும் அதை எதிரிகள் குறுக்காட்டினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய பூமி என கூறும் பூமியை எதிரிகள் அவர்களது பூமி என கூறுகிறார்கள் என்றும், அதனால்தான் பிரச்சணை இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். போலிசார் சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் மாலை சுமார் 4, 4.30 மணிக்கு வந்தார்களா என்றால் அப்போது நான் மருத்துவமனையில் இருந்தேன். அதனால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பெருந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்ததார்களா என்றால் நான் மயக்கமாக இருந்தேன். எத்தனை நாள் மயக்கமாக இருந்தேன் என்றால் ஒரு நாள் முழுவதும் மயக்கம் இருந்தேன்.

3)சம்பவத்தன்று இரவு 8 மணி போல் மயக்கம் தெளிந்துவிட்டது. மயக்கம் தெளிந்தபின்னர் சம்பவம் பற்றி ரவி மூலம் தெரிந்து கொண்டேன். எழுத்துமூலமான புகாரை கொடுத்தேனா என்றால் ரவி கொடுத்தார். நான் மயக்கமாக இருந்ததால் நான் போலிசாரிடம் விபரம் சொல்லவில்லை என்றால் இரவு 8 மணி அளவில் போலிசார் வந்து விசாரித்தபோது நான் சொன்னேன். அப்போது நான் எதிரிகளின் பெயரை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய பையன்கள் சொல்லி இருப்பார்கள்.

4)டாக்டரிடம் நான் இரண்டு பேர் அடித்ததாக கூறினேனா என்றால் கூறினேன். 1ம் எதிரிக்கு கை முறிந்துபோய் மருத்துவமனையில் சிகிசைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. நான் இரும்பு கம்பியால்1ம் எதிரியை அடித்து அவருக்கு கை முறிந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனக்கு அங்கு பூமியே இல்லை என்றும், நான் எதிரிகளின் பூமிக்குள் அத்துமீறி நுழைந்து உழவு செய்ய முற்சி செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான இடத்தில் எதிரிகள் தான் வீடு கட்டியுள்ளார்கள். எதிரிகள் வீடு கட்டி சுமார் 30 வருடம் இருக்கும். மேற்படி வீட்டில்தான் எதிரிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5)போலிசார் என்னை விசாரித்த போது பெண் எதிரி என்னை மார்பில் கடித்த விபரத்தை கூறினேனா என்றால் கூறினேன். போலிசார் என்னை விசாரித்த போது இருவரும் என்னை கீழே தள்ளிவிட்டார்கள் என கூறினேனா கூறினேன். போலிசார் என்னை விசாரித்த போது பெண் எதிரி என்னை குச்சியால் அடித்த விபரத்தை கூறினேனா என்றால் கூறவில்லை. எதிரிகள் என்னை தாக்கியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பூமி பிரச்சணைக்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6)நான் ரேகை வைத்த அசாஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அது பற்றி தெரியவில்லை. சாட்சி ரவி எனக்கு ஆதரவாக வழக்கு நடத்துகிறார் என்றால் சரியல்ல. நான் தான் எதிரிகளை தாக்கிவிட்டு அதில் இருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக புகார்

கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் பூமியில் உழவு ஓட்ட முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 44/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Ravi | Caste | |
| Father's Name | Marimuthu | Calling | |
| Village | Sakaraigoundenpalayam, Ponmudi | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A1-Saraswathi, W/o.Nachimuthu, A2-Nachimuthu, S/o.Karuppanagounder are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 14.03.2023

**<u>முதல் விசாரணை</u>**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் நாச்சிமுத்து மற்றும் சரஸ்வதி ஆவார்கள். ஆஜர் எதிரிகள் கணவன், மனைவி ஆவார்கள். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக மாலை 3.30 மணியில் இருந்து 4 மணி சுமாருக்கு நானும், எனது நண்பர் சௌந்தரராஜ்-ம் குச்சிக்காட்டு பிரிவு அருகே நின்று பேசிகொண்டிருந்தோம். ஆஜர் எதிரிகள் இருவரும் அசா1 டன் அசா1 ன் காட்டில் சண்டை போட்டுகொண்டிருந்தார்கள். நானும், எனது நண்பரும் ரோட்டில் இருந்து பார்த்துகொண்டிருந்தபோது சண்டை போட்டுகொண்டிருந்தார்கள்.

2)ஜெயகொடியின் மீது சரஸ்வதி அமர்ந்திருந்தார். சரஸ்வதி ஜெயக்கொடியை அவரது மார்பில் கடித்து வைத்துவிட்டார். நானும், எனது நண்பரும் பார்த்தபோது ஜெயக்கொடிக்கு ரத்தம் வந்ததால் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தபோது எனக்கு தெரிந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1)அசா1 க்கும், எதிரிகளுக்கும் இடையே நீண்ட காலமாக பூமி பிரச்சனை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சண்டை நடந்த இடம் 1 டம் எதிரி நாச்சிமுத்துவின் இடம் என்றால் சரியல்ல. அசா1 ன் பூமி ஆகும். சம்பவ இடம் அசா1 ன் பூமி என்பதற்கு நான் பத்திரம் எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை. அசா1 க்கும், எதிரிகளுக்கும் இடையே சிவில் வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியாது. நான் நின்று பேசிகொண்டிருந்த இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 1000 அடி தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 200, 300 அடி தூரம் இருக்கும்.

2)நான் அங்கிருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்குள் சண்டை முடிந்துவிட்டது என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த புகாரிலும் என்னை போலிசார் சாட்சியாக விசாரித்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் நடந்ததைதான் போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசாரிடம் எதிரிகள் கொடுத்த புகாரின்பேரிலான விசாரணையில் அசா1 ஜெயக்கொடி இரும்பு கம்பியை எடுத்து 1 ம் எதிரி நாச்சுமுத்துவை இடது கையில் ஓங்கி அடித்தார் என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசாரிடம் நான் உண்மையைதான் கூறினேன் என்றும் பொய் கூறவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

3)பெருந்துறை போலிசார் சம்பவம் பற்றி கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு 4.30 மணிக்கு வந்துவிட்டார் என்றால் சுமார் 5 மணி இருக்கும். போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கிகொண்டார்கள் என்றால் சரிதான். உழவு ஓட்ட ஜெயக்கொடி முயற்சி செய்தார் என்றும் அதை எதிரிகள் தடுத்தார்கள் என்றும், அதனால்தான் சண்டை வந்தது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் அசா1 ஜெயக்கொடியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு அனுப்பி மட்டும்தான் வைத்தேன்.

4)நானும், அசா1 ஜெயக்கொடியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள்

என்றால் சரிதான்.  எதிரிகள் வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். ஜெயக்கொடி  எனக்கு பழக்கமான நபர் என்றால் சரிதான். எரிரிகள் கொடுத்த புகாரில் போலிசாரிடம் உண்மையை சொல்லிவிட்டு தற்போது ஜெயக்கொடிக்கு வேண்டி மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 44/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW3 | Prosecution /Defence / Court | |
| Name | Soundararajan | Caste | |
| Father's Name | Appukutti | Calling | |
| Village | Varapalayam, Kampuliyampatti | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A1-Saraswathi, W/o.Nachimuthu, A2-Nachimuthu, S/o.Karuppanagounder are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 14.03.2023

<u>முதல் விசாரணை</u>

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு டெய்லராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் நாச்சிமுத்து மற்றும் சரஸ்வதி ஆவார்கள். ஆஜர் எதிரிகள் கணவன், மனைவி ஆவார்கள். கடந்த 16.09.2011 ம் தேதி மாலை சுமார் 3.30 மணியில் இருந்து 4 மணி அளவில் நானும், அசா2 எனது நண்பர் ரவியும் குச்சிக்காட்டுர் ரோட்டில் நின்று பேசிகொண்டிருந்தபோது அடிதடி சண்டை நடந்த சத்தம் கேட்டது. நானும், அசா2 ம் சண்டை நடந்த இடத்திற்கு சென்றபோது ஜெயக்கொடியை சரஸ்வதி ஜெயக்கொடியின் மார்பில் கடித்து வைத்திருந்தார்.

2)அதை பார்த்த நானும், அசா2 ம் ஆம்புலன்சிற்கு போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வந்தவுடன் ஜெயக்கொடியை ஆம்புலன்ஸ் மூலம் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை மறுநாள் விசாரித்தபோது எனக்கு தெரிந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1)ஜெயக்கொடி எனக்கு உறவு முறை வேண்டும் என்றால் உறவினர் அல்ல. சம்பவ தினத்தன்று உழவு ஓட்டும் போது சண்டை ஏற்பட்டது என்றால் சண்டை நடந்ததை தான் நான் பார்த்தேன். எதற்காக சண்டை நடந்தது என்பது எனக்கு தெரியாது. அப்போது டிராக்டர் நின்றுகொண்டிருந்தது என்றால் சரியல்ல.

போலிசார் எப்போது சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் அடுத்த நாள்தான் வந்தார்கள். நான் ஜெயக்கொடியுடன் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல.

2)எதிரிகள் கொடுத்த புகாரின்பேரில் என்னை போலிசார் விசாரிக்கவில்லை. போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு அடுத்த நாள் நான் சம்பவ இடத்தில் இருந்தபோது போலிசாரிடம் நான் சொன்னேன். ஒரு முறை தான் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது அசா1 ஜெயக்கொடி அருகில் இருந்த இரும்பு கம்பியை எடுத்து 1ம் எதிரி நாச்சிமுத்துவை இடது கையில் அடித்து விட்டதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், ரவியும் சம்பவ இடத்திற்கு சென்றபோது ஜெயக்கொடி கீழே படுத்து கிடந்தார். அப்போது அவருக்கு ரத்தம் வந்துகொண்டிருந்தது. அப்போது நாச்சிமுத்தும், சரஸ்வதியும் அந்த இடத்தில் இருந்து போனார்கள்.

3)1ம் எதிரி நாச்சிமுத்துவிற்கு கை முறிந்து மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்றால் அது பற்றி தெரியாது. போலிசார் விசாரித்தபோது ஜெயக்கொடி மீது சரஸ்வதிமீது உட்கார்ந்து கொண்டிருந்தார் என்பதை சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் ஜெயக்கொடியின் உறவினர் என்பதால் நான் சம்பவத்தை மாற்றி ஜெயக்கொடிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெயக்கொடி தான் 1ம் எதிரியை தாக்கி கையை முறித்து விட்டார் என்றும், அதை நான் நேரில் பார்த்து அதுகுறித்து 1ம் எதிரி கொடுத்த புகாரின்பேரில் போலிசார் விசாரித்தபோது உண்மையை கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 44/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW4 | Prosecution /Defence / Court | |
| Name | Shanmugam | Caste | |
| Father's Name | Muthusamy | Calling | |
| Village | Kuttankadu, | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A1-Saraswathi, W/o.Nachimuthu, A2-Nachimuthu, S/o.Karuppanagounder are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 14.03.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக நானும், கார்த்தியும் காலை 9 மணி சுமாருக்கு சரளை கடைக்கு சென்றபோது பெருந்துறை காவல் நிலைய போலிசார் எங்களை அழைத்ததன்பேரில் நாங்கள் இருவரும் சென்றோம். போலிசார் முந்தைய நாள் நடந்த பிரச்சணை பற்றி எங்களிடம் எடுத்து கூறி சாட்சிகளாக இருக்க கேட்டுகொண்டதன்பேரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக இருக்க ஒப்புகொண்டோம்.

2)போலிசார் அங்கு வந்து இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். போலிசார் எழுதியதில் நானும், கார்த்திக்கும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். (**பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். அடித்த குச்சியை கைப்பற்றியதற்காக நான் இந்த கையொப்பத்தை செய்தேன். **(கைப்பற்றுதல் மகசர் அசாஆ.3**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1)சம்பவ இடத்தில் இருந்து அன்றைய தினம் போலிசார் இரும்பு கம்பி ஒன்றை எடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் போலிசார் குச்சியை கையில் வைத்திருந்தார் என்றால் சம்பவ இடத்தில் கீழே கிடந்த குச்சியைதான் எடுத்தார். குச்சியை யாரும் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான்.

2)அப்போது என்னையும், சாட்சி கார்த்திக்கையும் தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். நான் ஜெயக்கொடிக்கு உறவினர் என்றால் சரியல்ல. ஒரே ஊர்காரர். ஜெயக்கொடியும், நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அதனால் நான் ஜெயக்கொடிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் குச்சி எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.